பக்கங்கள் 21

# காலை முரசு

## அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரித்த ஒரே தலைவர் ரணிலே!

**அமைச்சர் சுசில் புகழாரம்**

(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 29 சனிக்கிழமை 14.09.2024 | அதிர்வு 43

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை கோரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் மனுத் தாக்கல்




(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை கோரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நாளை 15ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளன.

இந்தநிலையில், யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தத் தடை விதிக்கக் கோரி 04▶

# கோட்டாபயவை விடவும் மோசமான வழியில் அநுர

## நாட்டின் பொருளாதாரத்தை அழிக்க எவருக்கும் இடமளிக்க முடியாது என்று ரணில் திட்டவட்டம்

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கை இறக்குமதிப் பொருளாதாரமா அல்லது ஏற்றுமதிப் பொருளாதாரமா எனத் தாம் கேள்வி எழுப்பி, 3 நாட்களாகியும் இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 02▶



## மீண்டும் தலைதூக்குகின்றது வன்முறை

# ரணில் – அநுர கூட்டை தோற்கடிக்க வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

“நாட்டில் தற்போது வன்முறையும் மிலேச்சத்தனமும் பயங்கரவாதமும் தலைதூக்கிக் கொண்டிருக்கின்றது. ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற வன்முறை காரணமாக பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கின்றது. 04▶






வவுனியாவில் இருந்து வழமையாகப் பேசும் நண்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார். ரொம்ப விசனத்துடன் – கவலையுடன் – ஒரு விடயத்தைச் சொன்னார்.

“தென்னிலங்கைக் கட்சிகளில் – அவற்றுடன் கூட்டு வைத்திருக்கும் தமிழ் கட்சிகளில் – இருந்த ஓர் அற்பத்தனமான வழக்கம் – பழக்கம் – முறைமை – தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளிடமும் வந்து விட்டன” என்பதுதான் அவரது ஆதங்கம்.

“கூட்டங்களுக்கு பஸ் விட்டு – லொறி விட்டு – ஆள்களை ஏற்றி இறக்குவது வழமை. இன்று, நேற்றல்ல, நீண்ட காலமாக அது நம் மத்தியில் உண்டு. 02▶

# அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரித்த ஒரே தலைவர் ரணிலே!

## அமைச்சர் சுசில் புகழாரம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு செய்ய வழி செய்திருக்கின்றார் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"2022 ஆம் ஆண்டில் நாட்டில் பல பிரச்சினைகள் காணப்பட்ட போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைகொடுக்காமையினால் மாற்றுக் கட்சி உறுப்பினர்களுடன் வேலை செய்ய வேண்டிய நிலைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வந்தது. நாட்டின் நிலையைக் கருத்தில் கொண்டு அந்தச் சவாலையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரச ஊழியர்களைப் பணிப் புறக்கணிப்புக்களுக்கு மாத்திரம் பயன்படுத்திவிட்டு கைவிட்டு விடுவர். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு செய்ய வழி செய்திருக்கின்றார்.

இன்று பங்களாதேஷில் தற்காலிக அரசு அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அங்கு வரிசை யுகம் தோன்றியுள்ளது. இதே கஷ்டங்களை இலங்கையும் அனுபவித்தது. அவ்வாறானதொருகஷ்டத்தைகடந்தேஇன்றைய நிலைக்கு வந்திருக்கின்றோம்.

இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளிடம் பெற்றக் கடனையும் நாம் திருப்பிச் செலுத்தியிருக்கின்றோம்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

ஏன் புலிகளின் காலத்தில் கூட அது இருந்தது. அப்படி அள்ளி வருபவர்களுக்கு சாப்பாடு, குளிர்பானம் கொடுப்பதும் கூட நம் மத்தியில் ஒரு வழக்கமாக நீண்ட காலம் இருந்து வந்த விடயம்தான். ஆனால் அப்படி ஏற்றி வருபவர்களுக்கு மதியம், இரவு புரியாணிப் பார்சலுக்கு மேலதிகமாக தலைக்கு இவ்வளவு பணம், அரை புட்டிப் பானம் என்றெல்லாம் கொடுக்கும் பண்பியல்பு தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளிடம் முன்பு இருந்ததே இல்லை. ஆனால் இப்போது வந்துவிட்டது. வெளிநாட்டுப் பணம் நேரடியாக நமது அரசியலில் தலையீடு செய்யத் தொடங்கியதும் அந்தப் பழக்கமும் வந்துவிட்டது. இனித் தமிழரின் அரசியல் அழியக் கடவது" – என்று சபித்தார் அவர்.

அந்த நண்பரின் கவலையை – ஆதங்கத்தை – மன்னாரில் வேறு ஒரு நண்பரிடம் கூறினேன். அவர் சிரித்தார்.

"நம்ம ஊரிலும் அதுதான் நிலைமை. புதிய வழக்கமாக இருக்கின்றது." – என்றார் அவர்.

"மட்டக்களப்பில் பிரம்மாண்டமான கூட்டம் ஒன்றுக்கு இப்படி ஆள் திரட்டுவதற்கு 60 லட்சம் ரூபா எஸ்டிமேட் அல்லது கொட்டேஷன் கொடுக்கப்பட்டு இருக்கின்றது" – என்று அவர் இருமலுடன் சொன்னார்.

ஆள்திரட்டிக் காட்டுவதற்கு அள்ளிக் கொட்ட நம்மவர்கள் வெளிநாட்டில் தயாராக இருக்கையில் இது எல்லாம் இனி தாராளமாக நடக்கும்.

பார்த்திருக்க வேண்டியது நமது பரிதாப நிலைமை.

* * *

திருகோணமலை மாவட்ட நீதிபதி எம்.கணேசராஜா உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இது தொடர்பான அறிவுறுத்தல் கடிதம் நேற்று முன்தினம் நேரடியாக அவருக்கு வழங்கப்பட்டது எனத் தெரிகிறது.

அவரது ஒழுக்க கேடான நடத்தை ஒன்று தொடர்பாக விசாரணையை ஆரம்பத்துள்ள நீதிச் சேவை ஆணைக் குழு அவரின் விளக்கத்தைப் கோரி பெற்றதன் பின்னர் அவரை சேவையில் இருந்து இடைநிறுத்தி உள்ளது.

அவரது இடத்துக்கு திருகோணமலை பிரதம நீதிவான் பயஸ் ரஸாக் பதில் கடமையாற்றுவார் என அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்பூசல் தொடர்பான வழக்கை இதுவரை விசாரித்து வந்தவர் நீதிபதி கணேசராஜா என்பது குறிப்பிடத்தக்கது.

---

### கோட்டாபயவை விடவும்...

அவன் திருடன், இவன் திருடன் என்று கூறாமல் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் வேலைத்திட்டத்தைத் தேசிய மக்கள் சக்தி முன்வைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

முன்னாள் விவசாய அமைச்சர் அநுர குமார திஸாநாயாக்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விட மோசமாக நாட்டின் பொருளாதாரத்தை அழிக்கத் தயாராகி வருகின்றார் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கஷ்டப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரத்தை அழிக்க எவருக்கும் இடமளிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

பேருவளை கடற்கரை விளையாட்டரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற 'ரணிலால் முடியும்' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மக்கள் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

புள்ளி விவரங்களுடன் விடயங்களை முன்வைப்பது போல் திசைகாட்டி தனது வரவு – செலவுத் திட்டம் பற்றிய உண்மைகளை புள்ளி விவரங்களுடன் மக்களுக்கு முன்வைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எனவே, மக்களை ஏமாற்றாமல் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் உண்மையான புரிதலுடன் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அரசு ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"திசைகாட்டிக்கு வாய்ப்பளித்து எதிர்காலத்தைச் சூனியமாக்க வேண்டுமா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். இப்போது அநுரகுமார என்னை விவாதத்துக்கு அழைக்கின்றார். ஆனால், நான் கேட்ட ஒரு கேள்விக்கு அவர் இன்னும் பதிலளிக்கவில்லை. இவ்வாறானவர்களிடம் எவ்வாறு எதிர்காலத்தைக் கையளிப்பது.?

மறுமுனையில் சஜித் பிரேமதாஸ எல்லாவற்றையும் இலவசமாகத் தருவதாகச் சொல்கின்றார். அவ்வாறு இலவசமாக வழங்க வேண்டுமாயின் அமெரிக்காவுக்கு நிகரான பொருளாதாரம் இலங்கைக்கு இருக்க வேண்டும். எனவே, செப்டெம்பர் 21 ஆம் திகதி உங்களின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது. டொலரும் இருக்காது." – என்றார்.

# தெபரவெவ நகரில் சஜித்தின் பிரசாரம்



ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடுசெய்த 49ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் தெபரவெவ நகரில் நடைபெற்றது.





















# ரயில் - ஓட்டோ விபத்து! இருவர் பரிதாபச் சாவு!!

ஓட்டோ ஒன்று ரயிலுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை காலி மாவட்டம், ரத்கம, விஜேரத்ன மாவத்தை ரயில் கடவையில் இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மருதானையிலிருந்து பெலியத்த நோக்கிப் பயணித்த ரயிலுடன் ஓட்டோ மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் 45 மற்றும் 55 வயதுடைய தொடங்குவ பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர்.

விபத்தில் மரணமடைந்தவர்களின் உடல்கள் பூஸா ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் ரத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ரணில் - அநுர...**

பல சமூக அமைப்புக்களின் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"இந்த நாட்டில் கருத்துச் சுதந்திரமும், விரும்பிய முறையில் அரசியல் செய்யவும் சுதந்திரம் இருக்கின்றது. இங்கு உருவெடுக்கின்ற கொடிய பாசிசவாதத்துக்கும், வன்முறைக்கும், மிலேச்சத்தனத்துக்கும் மக்கள் ஆதரவு அளிக்கின்றார்களா என்று கேள்வி எழுப்புகின்றோம். பொதுமக்களின் யுகத்துக்காக எந்தச் சந்தேகமும் இன்றி ஐக்கிய மக்கள் சக்திக்கு உந்து சக்தியைப் பெற்று தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்."

– என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 49 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் தெபரவெவ நகரில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது நாட்டைத் தீ மூட்டிய குழுவும், வங்குரோத்தடையைச் செய்த குழுவுக்கு பாதுகாப்பு வழங்குகின்றவர்களும் ஒன்றாக இணைந்துள்ளார்கள். ரணிலும் அநுரவும் அரசியல் திருமணம் செய்து கொண்டு இன்று தேனிலவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த தேனிலவுக் கொண்டாட்டத்தை நிறுத்த வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி விவசாயக் கடனை இரத்துச் செய்வதால் அநுரவும் ரணிலும் அதற்கு எதிராக ஒன்றிணைந்திருக்கின்றார்கள். குறைந்த விலையில் உரம் வழங்குவதற்கும், வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கும், எரிபொருள் நிவாரணம் வழங்கப்படுவதற்கும் இவர்கள் எதிராக இருக்கின்றனமையாலே தற்போது ஒன்றாக இணைந்து கொண்டிருக்கின்றார்கள்.

மக்கள் தொடர்ந்து அசௌகரியத்துடன் இருப்பதை ரணிலும், அநுரவும் விரும்புகின்றார்கள். வேளாண்மை விவசாயிகளையும், பால் பண்ணையாளர்களையும் பாதுகாப்பதற்கு இவர்கள் எதிராக இருக்கின்றார்கள்.

எனவே, இந்த ரணில் – அநுர ஆகியோரின் தந்திரக் கூட்டைத் தோல்வியடையச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொதுமக்களுடைய யுகத்துக்குப் பலத்தைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம். இன, மத, குல, பேதங்களை மறந்து ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெற அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம்." – என்றார்.

**தியாக தீபம் திலீபனின்...**

யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறும் என்றும், அன்றைய தினம் மனுவில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் மன்றில் முன்னிலையாக வேண்டும் என்றும் மன்று கட்டளையிட்டுள்ளது

யாழ். நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் இடம்பெறும் நிகழ்வைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பேருவளை கடற்கரையில் ரணிலின் பிரசாரம்

பேருவளை கடற்கரை விளையாட்டரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் "ரணிலால் முடியும்" வெற்றிப்பேரணி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப்பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.
































நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# லாயக்கற்ற ரணில்

இலங்கையில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி நிலை என்பது ஒரு சர்வாதிகாரிக்குரிய அதிகாரங்கள் நிறைந்த பதவியாகும். அப்படித்தான் இலங்கையின் அரசமைப்பின் கீழ் அதிகாரங்கள் அங்கு குவிக்கப்பட்டு அந்தப் பதவி கட்டமைக்கப்பட்டுள்ளது.

முப்படைகள் மற்றும் பொலிஸாரின் உயர் தள்பதி - தளகர்த்தர் - ஜனாதிபதிதான். ஆனால் அந்தப் பதவியை வைத்திருந்தும் கூட பேரினவாதத்தின் முன்னால் அது தமக்கு வலுவற்றது என்பதைத்தான் தமது தற்போதைய பதவிக்காலத்தின் இந்தக் கடைசி காலத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிரூபித்துச் செல்கின்றார்.

தன்னுடைய முழு அதிகாரத்திற்கும் உட்பட்ட விடயங்களில் கூட, தன் கொள்கைப்படி, தனது நிலைப்பாட்டின்படி, விருப்பப்படி ஆற்றும் துணிச்சலும், ஆளுமையும், திறமையும், விவேகமும் அற்றவர் தாம் என்பதை இந்த இறுதிக் கட்டத்திலும் அவர் உறுதிப்படுத்திச் செல்கின்றமைதான் துரதிஷ்டவசமானது.

அதுவும் ஈழத் தமிழர்கள் சம்பந்தப்பட்ட ஒரு முக்கிய விவகாரத்தில் தமது ஆளுமையின்மையை - அதிகார வறுமையை - மேலாதிக்கச் செல்வாக்கின்மையை - அம்பலப்படுத்தும் விதத்தில் செயற்பட்டு தமது பதவியின் இறுதிக் காலத்தை முடிக்கின்றார் அவர்.

தம் உறவுகளுக்காக - தம் மக்களுக்காக - நினைவேந்தும் உரிமை யாவருக்கும் உண்டு என்பதை பெரும் தத்துவ மேதை போல தமது கொள்கை நிலைப்பாடாக, தாம் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு பதவிக்கு வந்த காலத்தில் இருந்து, அவ்வப்போது அறிவித்து, வலியுறுத்தி, வெளிப்படுத்தி வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அந்த நிலைப்பாட்டை தமது அதிகார நிர்வாகத்தின் கீழ் செயலில் - நடைமுறையில் - நிலை நிறுத்தவோ அல்லது உறுதிப்படுத்திப் பற்றி நிற்கவோ முடியவில்லை. அத்தகைய அதிகார வலிமையற்ற - அதிகார வறுமை மிக்க - ஒரு தலைவராகவே அவர் தம்மை அடையாளப்படுத்தி இந்தப் பதவிக் காலத்தை முடிக்க வேண்டியவராக இருக்கின்றார்.


மக்களுக்குத் தமது உறவுகளை நினைவேந்தி, விளக்கேற்றி அஞ்சலிக்கு உரிமை உண்டு, அதை யாரும் தடுக்க முடியாது என்று அவர் கொழும்பிலிருந்து உபதேசித்த அதே சமயம்தான், அதே செயலுக்காக - குற்றத்துக்காக - மட்டக்களப்பில் சில தமிழர்கள் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். இது கடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலத்தில் நடந்தது.

நாளை தியாகி திலீபனின் நினைவேந்தல் ஆரம்பமாகவிருகின்றது. அஹிம்சை முறையில் போராடி, காந்தி தேசத்திற்கே காந்தீயம் போதித்த தியாகி திலீபனை அவரது நினைவு நாள்களில் ஈழத் தமிழர்கள் தேசம் கடந்து, நாடு கடந்து, நினைவேந்துவது வழமையாகும். அந்தக் காலம் நாளை தொடங்குகின்றது.

அதை யாழ்ப்பாணத்தில் நடத்த விடாமல் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்கும்படி கோரி, யாழ் நீதிமன்றுக்குப் போயிருக்கின்றது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இயங்கும் யாழ்ப்பாணப் பொலிஸ்.

மக்களுக்குத் தங்கள் உறவுகளை விளக்கேற்றி நினைவு கூரும் உரித்து உண்டு என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமது கொள்கை நிலைப்பாட்டை அறிவித்துக் கொண்டிருக்க, மறுபுறத்தில் அந்த உரித்து - உரிமை - யாழ் மக்களுக்கு எட்டி விடாமல் தடுக்கும் - அடிமைப்படுத்தும் - உத்தரவை விடுக்குமாறு கோரி யாழ் பொலிஸார் நீதிமன்றத்தை அணுகுகின்றனர்.

பொலிஸின் இந்த நடவடிக்கை தமிழர்தம் உறவுகளை நினைவு கூர - போற்றி மதிக்க - அவர்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமையை வலுக்கட்டாயமாக பறிக்கும் வன்முறைப் போக்காகும். அதை தடுப்பதற்கு - தமக்குக்கீழ் இருக்கும் பொலிஸை நெறிப்படுத்துவதற்கு - லாயக்கற்றவர் தாம் என்பதை ரணில் விக்கிரமசிங்க இன்னொரு தடவை நிரூபித்து நிற்கின்றார்.





# பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு கம்பவாரிதி எழுதிய திறந்த மடல்....!

## சுடுசரம்-4

**ஜனாதிபதி பொது வேட்பாளர்**
**அரியநேத்திரன் அவர்களுக்கு!**
**கம்பவாரிதி இ. ஜெயராஜ் எழுதும் கடிதம்.**

சகோதரர் அரியநேந்திரன் அவர்கட்கு, வணக்கம். உங்களது நோக்கமும் எதிர்கால அரசியல் வாழ்வும் உருப்படப் போவதில்லை எனத் தெரிவதால் உங்களின் நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

❖ ❖ ❖ ❖ ❖

பழைய காலத்தில் எங்கள் ஊரில் வைரவக் கோயிலுக்குப் பலி கொடுக்கக் கிடா ஆடுகளை அலங்கரித்துக் கொண்டு செல்வார்கள். அந்த அலங்காரம் எல்லாம் சிறிது நேரத்திற்குத்தான். கொண்டு செல்பவர்கள் இறுதியில் அவ் ஆட்டைப் பலி கொடுத்து விடுவார்கள்.

❖ ❖ ❖ ❖ ❖

தான் பலியாகப் போவது தெரியாமல் அவ் ஆடும் தன் அலங்காரம் நினைத்து பெருமையோடு ஊர்வலம் செல்லும். தன்னை அலங்கரித்து ஊர்வலம் அழைத்துச் செல்பவர்களின் நோக்கம் அவ் ஆட்டுக்குத் தெரிவதில்லை. சிறிது நேரத்தில் தன் கழுத்து துண்டாடப்படப்போவது தெரியாமல் தனக்கும் பெருமை கிடைப்பதாய் நினைந்து அவ் ஆடு போவது போலத்தான் இப்பொழுது உங்கள் நிலையும் ஆகியிருக்கிறது.

❖ ❖ ❖ ❖ ❖

வாக்குக் கேட்டு, நீங்கள் சிறு குழுவினருடன் செல்வதை ஊடகங்கள் மூலம் காண்கிறேன். அப்போதெல்லாம் எனக்கு அந்த ஆடும் அதனை பலி கொடுக்க அழைத்துச் செல்லும் ஆள்களும்தான் நினைவுக்கு வருவார்கள்.

❖ ❖ ❖ ❖ ❖

ஜனாதிபதி தேர்தலை, உரிமை வேண்டிய தமிழ் மக்களின் ஒருமித்த உணர்வைக் காட்டும் தேர்தலாக மாற்றப் போவதாக சில கட்சிகளின் தலைவர்கள் முடிவுசெய்த போதே எனக்கு அது நல்ல நகைச்சுவையாகப்பட்டது.

❖ ❖ ❖ ❖ ❖

தமது பதவி ஆசைக்காக முடிந்தளவு சண்டைகள் போட்டுக்கொண்டு தனித்தனியாய்ச் சிதறி நிற்கும் இவர்கள் தான் தமிழ் மக்களின் ஒருமித்த உணர்வைக் காட்டப் போகிறார்களாம். நல்ல வேடிக்கை இது!

❖ ❖ ❖ ❖ ❖

ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று பாதிரியார் ஒருவர் தேவாலயத்தில் அன்பைப் பற்றி பிரசங்கம் செய்தாராம். எல்லா உயிர்கள் மேலும் நாம் அன்பு செய்ய வேண்டும் என அவர் பேசிய பேச்சால் பல பேர் நெஞ்சுருகிப் போனார்களாம். மதியம் வீட்டுக்கு வந்த பாரதியார் சாப்பிடவென உட்கார, மேசையில் பரிமாறப்பட்ட உணவில் அவர் சொல்லிவிட்டுப்போன கோழிக்கறி இருக்கவில்லையாம்.

மனைவியைக் கூப்பிட்டு ஏன் கோழி சமைக்கவில்லை என பாதிரியார் கடிந்து கொள்ள, அப்பாவியான அவர் மனைவி "சேர்ச்சில் நீங்கள் பேசிய பேச்சைக் கேட்டு எந்த உயிர்களையும் கொல்லக்கூடாதென்று நினைத்து விட்டேன். அதனால்தான் சமைக்கவென பிடித்து வைத்திருந்த கோழியைத் திறந்து விட்டேன்," என்றாராம். அதுகேட்டு தலையில் அடித்துக் கொண்ட பாதிரியார் மனைவியை நோக்கி, "ஊருக்குத்தான் உபதேசம் பெண்ணே! அது உனக்கும் எனக்கும் இல்லையடி" என்றாராம். தமிழர்களின் ஒருமித்த உணர்வைக் காட்ட நினைக்கும் தலைவர்களை பார்க்கும் போதெல்லாம் எனக்கு இந்தப் பாதிரியார்தான் ஞாபகத்தில் வருகிறார்.

❖ ❖ ❖ ❖ ❖

ஒரு கட்சியுடன் இன்னொரு கட்சி ஒற்றுமையில்லாமல் இருப்பது போக, ஒரு கட்சிக்குள்ளேயே ஒற்றுமை இல்லாச் சண்டைகள் நடப்பதைப் பார்த்து, இந்த உலகமே சிரித்துக் கொண்டிருக்கிறது.

❖ ❖ ❖ ❖ ❖

தமிழரசுக் கட்சியைத்தான் சொல்கிறேன். கட்சியின் மத்தியக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பான்மையர் சஜித் பிரேமதாஸாவை ஆதரிப்பது என்ற முடிவை எடுக்க, அதை மீறி ஒரு தனி உறுப்பினர் பொதுவேட்பாளரை தான் ஆதரிக்கப்போவதாக அறிவிக்கிறார். என்னே தமிழரின் ஒருமித்த உணர்வு!

❖ ❖ ❖ ❖ ❖

முன்பு, கட்சியின் தீர்மானத்தை மீறிச் செயல்பட்ட இருவரை கட்சியில் இருந்து விலக்கிய வரலாற்றை மறந்துபோய், பொது வேட்பாளரை ஆதரிப்பவர் செயல்படுகிறார். கட்சி எடுத்த முடிவுக்கு மாறாக, பொது வேட்பாளரின் வெற்றிக்காக அவ் உறுப்பினர் வெளிநாடுகளுக்குச் சென்றெல்லாம் பணம் சேர்த்து வருகிறார். கட்சியும் அதைப் பார்த்துக்கொண்டு ஒன்றும் செய்யமுடியாமல் கை பிசைந்து "நெட்டை மரங்கள் என நின்று புலம்புகிறது."

❖ ❖ ❖ ❖ ❖

கட்சியின் தலைவர் அங்கும் போகிறார், இங்கும் நிற்கிறார். கட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமலிருக்க அவ்வப்போது அவர் விருப்பப்படி அவருக்கு வருத்தங்களும் வந்துவிடுகின்றன. தான் எந்தப் பக்கம் என்று அவருக்கேத் தெரியவில்லை. "இருதலைக் கொள்ளி எறும்பாய்" தத்தளிக்கும்

தொடர்ச்சி▼

# பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு கம்பவாரிதி எழுதிய திறந்த மடல்....!

**தொடர்ச்சி▲**

அந்த “வேடிக்கை மனிதரை”க் காணச் சிரிப்பாய் இருக்கிறது.

❖ ❖ ❖ ❖ ❖

நிலைமை இப்படியிருக்க, மற்றவரின் உட்பகையே தம் பலம் என நினைத்த ஏனைய சிறு தமிழ்க் கட்சிகள், இச்சூழ் நிலையை பயன்படுத்தி, தாம் வளர எண்ணி, அதற்கு ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்த முற்படுகின்றன. அந்த முயற்சியின் விளைவுதான் “பொது வேட்பாளர் நிறுத்தம்“ எனத் தொடங்கப்பட்டது.

❖ ❖ ❖ ❖ ❖

இவர்களின் மொத்தத்திட்டம் என்னவென்றால் இச் சதியை உருவாக்கி தமிழரசுக் கட்சியை பிளவு படுத்துவதும், தமிழர்களை ஒன்று படுத்துதல் என்ற கருத்துக்கு பழைய போராட்ட “முலாம்“ பூசி தமிழர்களை தம் பக்கம் ஈர்ப்பதும் தான்.

❖ ❖ ❖ ❖ ❖

இந்தத் திட்டத்திற்காய் ஜனாதிபதி தேர்தல் களத்தில் ஒருவரை நிறுத்த, அவர்களுக்கு ஓர் “அப்பாவி“ தேவைப் பட்டார். அங்ஙனம் நிறுத்தப்படும் வேட்பாளர் தப்பித்தவறி அதிக வாக்குகளை பெற்று வென்று விட்டால், அவர் தமிழர் மத்தியில் ஒரு புதிய அரசியல் சக்தியாய் மாறி விடுவாரோ என அஞ்சி, பொது வேட்பாளராக நிறுத்தப்படுபவர் தொடர்ந்து தேர்தல் அரசியலில் ஈடுபடக்கூடாது என புதிய ஓர் நிபந்த னையையும் இவர்கள் விதித்தார்கள்.

❖ ❖ ❖ ❖ ❖

முதலில் பொது வேட்பாளர் பட்டியலில் பெயர் பதிக்க விரும்பிய பலரும் புத்திசாலித்தனமாக மெல்ல விலகிவிட, அவர்களின் திட்டமறியாது அவர்களின் சூழ்ச்சிக்கு பலியாக அப்பாவியாக நீங்களாக முன் வந்தீர்கள். தாம் கிழக்குக்கு இடம் கொடுத்தோம் என்று சொல்லிக்கொள்ள உங்கள் வருகை வசதியாய்ப்போக சதி வகுத்த அத்தனை பேருக்கும் அப்படி யொரு மகிழ்ச்சி.

❖ ❖ ❖ ❖ ❖

தேர்தல் கள முடிவுகள் என்ன ஆகுமோ என்று சிந்திக்கும் தகுதி உங்களுக்கு இல்லை என்றே நினைக்கிறேன். இருந் திருந்தால் எல்லோருமாய்ச் சேர்ந்து ஏற்றிவிட கூரையின் உச்சிக்கு ஏறி, விழும்போது தனியேதான் விழுவேன் என்பது கூட தெரியாமல் கொடி பிடித்துத் திரிந்திருக்கமாட்டீர்கள்.

❖ ❖ ❖ ❖ ❖

இம்முறை ஜனாதிபதி தேர்தல் களத்தின் முடிவுகள் என் னாகும் என்று பலரும் ஆய்வுகளை வெளியிட்டு வருகி றார்கள். அதைக்கூட நீங்கள் படிப்பதில்லை என்று தெரிகிறது.

❖ ❖ ❖ ❖ ❖

சுயேச்சை வேட்பாளராய் நிற்கும் தற்போதைய ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் “சேடம்” இழுத்துக் கொண்டிருந்த நாட்டைதன் கெட்டித்தனத்தால் மீட்டு, எழும்பி உட்கார வைத்திருக்கிறார். அவருடைய முதல் தகுதியாய் இது கொள்ளப்படுகிறது.

❖ ❖ ❖ ❖ ❖

ஆனாலும், அதி புத்திசாலியான இவரை முழுமையாய் நம்ப யாரும் தயாராக இல்லை. தனது பிரிக்கும் ஆற்றலால் மஹிந்த குழுவினரிடம் இருந்து பலரை இவர் தன் பக்கம் இழுத்து வெற்றிக்கான அடையாளம் காட்டினார். ஆரம்பத்தில் இந்தியாகூட இவரை ஆதரிப்பதாய்த் தோன்றியது. ஆனால், இன்றைய நிலைமை அப்படியாய் இல்லை.

❖ ❖ ❖ ❖ ❖

அமெரிக்கச் சார்பாளரான ரணிலின் வெற்றியை இந்தியா அவ்வளவு விரும்பாதது போல் தெரிகிறது. அருகில் இருக்கும் இந்தியாவை மீறி இவரால் வெற்றி கொள்ள முடியுமா என்பது ஏற்பட்டிருக்கும் முதல் கேள்வி.

❖ ❖ ❖ ❖ ❖

பழைய ஜனாதிபதி மஹிந்த குடும்பத்தினரை இவர் விட்டும் விடாமலும் செயற்பட்டுக் கொண்டிருப்பதாய்த் தோன்ற, அத னால் இவர்பின் செல்வது சரியா? பிழையா? என மக்கள் மத்தியில் ஓர் குழப்பம் ஏற்பட்டதால், அவர்களின் வாக்கு இவரைச் சாருமா? இரண்டாவது கேள்வி.

❖ ❖ ❖ ❖ ❖

யார் என்ன சொன்னாலும், ஏதுதான் நடந்தாலும், இன்றும் தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியாக நம் மக்க ளாலும் உலகத்தாராலும் தமிழரசுக் கட்சியே ஏற்கப்படுகிறது. இக்கட்சி தந்த அழுத்தத்தால்தான் ஜனாதிபதி தேர்த லில் நிற்கும் முக்கிய மூவரின் தேர்தல் அறிக்கையில் “ஒற் றையாட்சி“ எனும் சொற்பிரயோகம் இல்லாமல் போயிருப்பதை நாம் கவனித்தே ஆகவேண்டும்.

❖ ❖ ❖ ❖ ❖

கடந்த காலங்களில் ரணிலுடன் “தேனிலவு“ கொண்டாடிய இக்கட்சி, இம்முறை அவரை “விவாகரத்து“ச் செய்ய காரணம் இல்லாமல் இல்லை.

◗ தமிழர்க்கான உரிமை வழங்கலில் ஆட்சியாளராய் இருந்தபோதும் அதற்கு முன்பும் முட்டுக்கட்டை போட்டவர் என்பது ஒன்று.

◗ என்னதான் இருந்தாலும் தமிழர்க்குக் கைகொடுக்கக்கூடிய இந்தியாவின் ஆதரவைப் பெறாதவர் என்பது மற்றொன்று.

◗ தமிழர்க்கு ஒட்டுமொத்த தீங்கைச் செய்த மஹிந்த குடும்பத்தாருடன் இவர் பேணி நிற்கும் உறவு இன்னொன்று.

◗ தமிழ்க் கட்சிகளால் இதுவரை துரோகிகளாய் ஓதப்பட்டுவந்த, டக்ளஸ், பிள்ளையான் போன்றோர் இவரோடு இணைந்து நிற்பது இன்னொன்று.

◗ அநுர, சஜித் ஆகியோருக்கு அடுத்தபடியாகத்தான் இவர் வாக்குப் பெறுவார் என்பதாய் ஓதப்படும் செய்திகளின் பா–திப்பு வேறொன்று.

இப்படி, ரணிலின் வெற்றி வாய்ப்பு சந்தேகத்திற்குரியதாய் மாறி இருப்பதும் மற்றைய காரணங்களும்தான் ரணிலுடனான தமிழரசுக்கட்சியின் மன முறிவுக்குக் காரணமாயின எனலாம்.

❖ ❖ ❖ ❖ ❖

அடுத்து, இம்முறை இவர்களின் கைதான் வெற்றிக்கனிக்கு மிக அருகில் இருப்பதாகச் சொல்லப்படும் ஜே.வி.பி. அணி பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும். நடக்கும் ஜே.வி.பி.யின் தேர்தல் கூட்டங்களில் பெருமளவாய்க் கூடுகிற மக்களைக் காண, சிங்கள மக்கள் ஜே.வி.பி.க்கு ஆதரவாக இம்முறை கிளர்ந்தெழுந்திருப்பதாய்த் தோன்றுகிறது.

❖ ❖ ❖ ❖ ❖

அக்கட்சியின் தலைவர் அநுர, வடக்கு கிழக்குத் தமிழரின் ஆதரவை பெரிதும் விரும்புகிறார் எனத் தெரி கிறது. அதுமட்டுமல்லாமல் அவருக்கு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான சுமந்திரனோடு நெருங்கின உறவிருப்பதும் அனைவரும் அறிந்த உண்மையாம்.

❖ ❖ ❖ ❖ ❖

அதனால்தான் அண்மையில் யாழ் சென்ற ரணில், அநுர தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதமாகப் பேசினார் எனவும் அதனால் யாழ். மக்களிடம் அவர் மன்னிப்புக்கோரவேண்டும் என்றும் தெரிவித்தார். ஆனால் அநுர அப்படி இனவாதமா கப் பேசவில்லை, அவர் அப்படி இனவாதமாகப் பேசுபவரும் அல்லர் என சுமந்திரன் பகிரங்கமாய்க் கருத்து வெளியிட்டார். அந்த அறிவிப்பு புத்திசாலித்தனமானது. ஒருவேளை அநுர அணி வெற்றி பெற்றால், கரம் கொடுத்து தொடர்பு பேண அவ்வ றிக்கை பயன்படும் என சுமந்திரன் நினைத்திருப்பார்போலும். அந்த ராஜ தந்திரத்தை அவதானிகள் பாராட்டுகிறார்கள்.

❖ ❖ ❖ ❖ ❖

இவையெல்லாம் இருந்தபோதும் அக்கட்சியை நீக்கி, சஜித்துக்கே ஆதரவு என அறிவித்த தமிழரசுக் கட்சியின் மதிநுட்பமும் பாராட்டத்தக்கதேயாம். தமிழர்களின் காவல–னாய்க் கருதப்படும் இந்தியாவின் ஆதரவை அநுர இழந்து நிற்கிறார் என்பதும், அவர் வென்றால் கூட பொதுவுடமை தத்துவத்தைப் பாதையாய்க் கொண்ட அவரை மேற்கு நாடுகள் ஒருக்காலும் வளர விடாது என்பதும் காரணமாக அநுரவோ–வாடு இணைந்தால், தமிழர்க்குப் பயன்வராது எனக்கருதி–யே அவர்களையும் கைகழுவிய தமிழரசுக் கட்சி சஜித்துக்கு ஆதரவு தந்து நிற்கிறது.

❖ ❖ ❖ ❖ ❖

நிறைவாக சஜித்தின் நிலைமை என்னவென்றால் அவருக்கும் மக்கள் ஆதரவு நிறைந்திருப்பதாகவே சொல்லப்படுகிறது. சென்றமுறை ஜனாதிபதி தேர்தலில் நூலிழையில் தன் வெற்றியை இழந்தவர் அவர். மக்கள் கிளர்ச்சி எழுந்தபோது அவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கிய ரணிலின் சில செயல்களால் ஆத்திரம் அடைந்திருக்கும் சிங்கள இளை ஞர்கள் பலர், சஜித்திற்கு ஆதரவளிக்க வாய்ப்பிருக்கிறது

**தொடர்ச்சி▼**

# பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு கம்பவாரிதி எழுதிய திறந்த மடல்....!

**தொடர்ச்சி▲**

என்கிறார்கள்.

❖ ❖ ❖ ❖ ❖

அதுமட்டுமல்லாமல் இந்தியாவும் இம்முறை சஜித்தின் வெற்றியை எதிர்பார்த்து செயல்படுவதாயும் சொல்லப்படுகிறது. தன் கையில் ஆட்சிப்பலம் இருந்தபோது, தமிழர்காக எதுவும் செய்யாதது மட்டுமன்றி, தமிழர்களுக்கெதிரான செயற்பாடுகளை ரணில் கண்டும் காணாமலும் இருந்தார். அதனால் அவர் மேலான அந்த வெறுப்பு தமிழர்களுக்கு சஜித்தின் மீது விருப்பாய் மாறியிருக்கிறது.

❖ ❖ ❖ ❖ ❖

'கொரோனா"க் காலத்தில் இஸ்லாமியர்களின் சடலங்களை அவர்களின் மதக்கட்டுப்பாட்டை மீறி கொண்டு சென்று தகனம் செய்த மஹிந்த, கோட்டாபாய குடும்பத்தினருடன் இன்றும் கைகோர்த்து நிற்கும் செயலால் ஏற்பட்டிருக்கும் இஸ்லாமியர்களின் வெறுப்பு ரணிலின் மீதும் பாய்ந்திருக்கிறது. அந்த எதிர்ப்பும் சஜித்திற்கான ஆதரவாய் மாறி இருப்பது உண்மை.

❖ ❖ ❖ ❖ ❖

இப்படியாக முஸ்லிம்கள், தமிழர்கள் என சிறுபான்மைக்குள் பெரும்பான்மையாய் இருக்கிற கட்சிகள் இம்முறை சஜித்துக்கு 'முண்டு' கொடுக்க முன்வந்திருக்கின்றன. இவையெல்லாம் ஒன்றிணைவதால் சஜித்துக்கான வெற்றி வாய்ப்பும் நெருங்கி வருவதாய்த் தோன்றுகிறது.

❖ ❖ ❖ ❖ ❖

இந்தக் கணக்குகளைப் போட்டுப் பார்த்துத்தான் தமிழரசுக்கட்சி சஜித்தை ஆதரிப்பதென முடிவு செய்திருக்கிறது. அம்முடிவு சரியானதே. ஒருவேளை இவையெல்லாவற்றையும் மீறி ரணிலோ, அநுரவோ வெற்றி பெற்றால் அதனை எதிர் கொள்ளும் விதத்தினையும் தமிழரசுக் கட்சி இப்போதே திட்டமிட்டுக் கொள்ளல் வேண்டும்.

❖ ❖ ❖ ❖ ❖

இவற்றையெல்லாம் நீங்கள் சிந்தித்ததாய்த் தெரியவில்லை. உரிமைநோக்கிய தமிழர்களின் ஒற்றுமையைக் காட்டுவதாய்க் கூறி மற்றவர்களால் தள்ளப்பட்டு, தேர்தல் குளத்தில் குதித்துள்ளீர்கள். நீங்களும், உங்களைத் தள்ளிவிட்டவர்களும் ஆழச் சிந்தித்ததாய்த் தெரியவில்லை. அரசியல் குளத்தில் ஆழ்ந்து போகச் சிந்திப்பதாய்த்தான் தெரிகிறது.

❖ ❖ ❖ ❖ ❖

சென்றமுறை வடக்கில் அதிகூடிய வாக்குகள் பெற்று அங்கஜன் வென்றதையும், கிழக்கில் சிறைச்சாலையில் இருந்தபடி அதிகூடிய வாக்குகள்பெற்று பிள்ளையான் வென்றதையும் நீங்கள் எல்லோரும் மறந்து போனீர்கள். அதுமட்டுமல்லாமல் டக்ளஸ்க்குக்கென குறிப்பிட்ட வாக்குகள் இன்றும் இருப்பது நிஜமாம்.

❖ ❖ ❖ ❖ ❖

அதுபோலவே முன்பு யு.என்.பி. சார்பாக வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்ற விஜயகலாவிற்கும் குறிப்பிட்ட அளவான வாக்குகள் இருக்கத்தான் செய்கின்றன. தமிழரசுக் கட்சி சஜித்தை ஆதரிப்பதென முடிவு செய்திருப்பதால், அக்கட்சியினுடைய பெரும்பான்மை வாக்குகளும் சஜித் அணியைச் சாரப்போகின்றது.

❖ ❖ ❖ ❖ ❖

அவை தவிர வடக்குக் கிழக்கின் எஞ்சிய வாக்குகளேனும் உங்களுக்கு முழுமையாய்க் கிடைக்குமா என்று தெரியவில்லை. மக்களை ஈர்க்கும் இலட்சணம் பேச்சாலோ, செயலாலோ, தோற்றத்தாலோ உங்களுக்கு கிடையவே கிடையாது. இந்நிலையில் தமிழரின் உரிமை வேண்டிய ஒருமித்த குரலைக் காட்டப்புறப்பட்டு, கடைசியில் தமிழர்கள் உரிமை வேண்டி நிற்கவில்லை என்று உலகிற்கு அறிவிக்க வழிசெய்திருக்கிறீர்கள் என்றுதான் நினைக்கிறேன். வீணாகத் தடி கொடுத்து அடிவாங்கிய நிலைதான் ஏற்படப்போகிறது. வரலாற்றுச் சாதனையாளராக நினைத்து தேர்தலில் குதித்த நீங்கள் கடைசியில், வரலாற்றுப் பழி ஏந்தி நிற்கப்போகிறீர்கள்.

❖ ❖ ❖ ❖ ❖

என்னவோ, இடர் சூழ்ந்து வரும் தமிழ் இனத்தையும் அப்பாவியான உங்களையும் கடவுள் காக்கட்டும் நன்றி.




# ஓட்டோ விபத்தில் இளைஞர் மரணம்

## மூவர் படுகாயம்

கலஹா பிரதேசத்தைச் சேர்ந்த 4 இளைஞர்களுடன் சுற்றுலா சென்ற ஓட்டோ, பாதையை விட்டு விலகி வீடொன்றின் மீது வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஏனைய மூன்று இளைஞர்களும் காயமடைந்த நிலையில் கலஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் கலஹா வெதஹெட்டகிராமத்தைச்சேந்தஉடுதெனியே கெதர கவிந்துரொசான் பிரேமவன்ச என்ற 24 வயது இளைஞரே உயிரிந்துள்ளார்.

கலஹா பிரதேசத்தைச் சேர்ந்த 11 பேரடங்கிய இளைஞர்கள் குழு திருகோணமலைக்குச் சுற்றுலா செல்லும் நோக்கில் வான் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். இந்தக் குழுவினருடன் இணைந்துகொள்தற்காக நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கலஹா நகரில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வெதஹெட்ட பிரதேசத்திலிருந்து மேற்படி 4 இளைஞர்களும் ஓட்டோவில் பயணித்த சந்தர்ப்பத்திலேயே விபத்து ஏற்பட்டுள்ளது.


உயிரிழந்த நபருக்குச் சொந்தமான ஓட்டோவை அவரின் சகோதரர் செலுத்திச் சென்ற சந்தர்ப்பத்தில் சாரதிக்கு நித்திரை வந்ததன் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் கலஹா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுப் பிரதே பரிசோதனைக்காகப் பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் கலஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# தமிழர்கள் வாக்கு யாருக்கு?

# ஒரு தந்திரோபாய ஆய்வு!



டாக்டர்
முரளி வல்லிபுரநாதன்
(சமுதாய மருத்துவ நிபுணர்)

ஜனாதிபதித் தேர்தல் இலங்கையில் ஆரம்பித்த கடந்த நான்கு தசாப்த காலமாக, சிங்கள ஜனாதிபதிகள் எவரும் தமது உரிமைகளைத் தரமாட்டார்கள் என்பதை உணர்ந்து இருந்தும், இனவாதம் குறைந்த, தமக்கு குறைந்த கெடுதலைச் செய்யக்கூடியவர் எனத் தாம் கருதிய வேட்பாளருக்கே தமிழர்கள் வாக்களித்துக் கொண்டிருந்தார்கள்.

அதேவேளை, மகாவம்சக் கதைகளினால் கட்டமைக்கப்பட்ட இனவாதக் கருத்துகளால் உந்தப்பட்ட சிங்களவர்கள்- துட்டகைமுனு காலத்தில் இருந்து காணப்படும் தமிழர்கள் மீண்டெழுந்து வந்துவிடுவார்கள் என்ற "மகாவம்ச மனநிலையால்" - தமிழர்களை அடக்குமுறைக்குள்ளாகக் கூடிய கொடுமையான சிங்களத் தலைவர்களைத் தெரிவு செய்து வாக்களித்து கொண்டிருந்தார்கள்.

இதனால் கடந்த காலத்தில் இடம்பெற்ற எட்டுத் தேர்தல்களில் இரண்டு சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய ஆறு சந்தர்ப்பங்களில் தமிழர்களும் சிங்களவர்களும் எதிரும் புதிருமாக வாக்களித்தமையுடன், எண்ணிக்கை குறைவானதால் தமிழர்களின் ஆதரவைப் பெற்ற ஜனாதிபதி வேட்பாளர்கள் தோல்வியைத் தழுவி இருந்தார்கள்.

ஆனால் 1994 முதன்முறையாக “சமாதான தேவதை உருவகத்துடன்“ சந்திரிக்கா போட்டியிட்ட போது அவர் மீது புதிய நம்பிக்கையுடன் தமிழர்கள் வாக்களித்த அதேநேரம், நீண்ட காலமாக ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில் இடம்பெற்ற அநியாயங்களினால் வெறுப்புற்று இருந்த சிங்கள மக்களும் இணைந்து வாக்களித்ததனால் சந்திரிகா 62 வீத வாக்குகளை பெற்று அமோக வெற்றியைப் பெற்றார். அதாவது முதல் முறையாக தமிழரின் ஆதரவையும் பெற்ற ஜனாதிபதி வெற்றியீட்டினார்.

அதன் பின் 2015 ஆம் ஆண்டு தேர்தலில் இனவாதத்துக்கு மத்தியிலும் சிறிசேன தனது சொந்த மாவட்டமான பொலன்னறுவ பகுதியில் அதிகளவு சிங்கள வாக்குகளையும் பெற்று , அதேநேரம் மஹிந்தவின் செயல்களினால் வெறுப்புற்று இருந்த தமிழ் மக்களும் சிறிசேனவுக்கு ஆதரவாக வாக்களித்ததனால் சிறிசேன குறைந்த பெரும்பான்மையுடன் 51 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். அதாவது இரண்டாவது தடவையாக தமிழரின் ஆதரவு பெற்ற ஜனாதிபதி வெற்றியீட்டினார்.

இம்முறை தேர்தல் 2022 இல் நாடு வங்குரோத்து நிலை அடைந்து, சிங்கள மக்கள் வெறுப்புடன் ராஜபக்ஷர்களை ஆட்சியில் இருந்து துரத்தி அடித்து, இரண்டு வருடங்களின் பின்னர் வருகிறது. “நாட்டின் பொருளாதாரத்தை மீட்டுவிட்டேன்” என்றும் “தொடர்ந்து பொருளாதாரத்தை மீட்க” தனக்கு வாக்களிக்குமாறும் ரணில் மார்தட்டிய போதிலும், 09.09. 2024 ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் வோல்கர் துர்க் வெளியிட்ட அறிக்கையில், 2021 இல் இருந்து 2023 வரையான காலப்பகுதியில் இலங்கையில் வறுமை இரு மடங்காக அதிகரித்து இருப்பதாகவும் மக்கள் அடிப்படை தேவைகளான உணவு, சுகாதார சேவை, கல்வி மற்றும் (மின்)சக்தி தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் திணறுகிறார்கள் என்றும் தெரிவித்து இருப்பது போலித் தேர்தல் பிரச்சாரங்களுக்கு மத்தியில் பல உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

இந்தப் பொருளாதார பிரச்சினையே இம்முறை சிங்கள மக்களின் வாக்குகளை யார் பெறப் போகிறார்கள் என்பதை தீர்மானிக்க போகிறது. அதாவது பெரும்பாலான சிங்கள மக்கள் ரணில், சஜித், நாமல் மற்றும் அவர்களுக்கு பின்னால் இருக்கும் அரசியல்வாதிகள் அனைவரும் ஊழல் நிறைந்த அரசியல்வாதிகளாகவும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு அவர்களே காரணமானவர்கள் என்றும் கருதுகிறார்கள். “நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் மாறிமாறி ஆண்ட பிரதான இரு கட்சிகளுமே எழுபத்து ஐந்து ஆண்டுகளில் தமது நாட்டை வங்குரோத்து ஆக்கியதாகச் சீற்றமுற்றுள்ள சிங்களச் சாமானியன், இம்முறை புதிய ஒரு தலைவருக்கும் அவரது கட்சிக்கும் வாக்கினைச் செலுத்தும் மன

தொடர்ச்சி▼

# தமிழர்கள் வாக்கு யாருக்கு?

# ஒரு தந்திரோபாய ஆய்வு!



தொடர்ச்சி▲

நிலையில் உள்ளான்" என வெளிவரும் தகவல்கள் கோடி காட்டுகின்றன. இதன் காரணமாகச் சிங்கள மக்களின் வெறுப்பு வாக்குகள் அனைத்தும் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான புதுமுகம் ஒன்றிற்குச் செல்லவிருக்கிறது.

வழமையான அரசியல்வாதிகளின் மீதான மக்களின் இந்த அடிப்படை வெறுப்பைப் புரிந்து கொள்ளாமல், ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்கள் மாறிமாறிப் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களுடன் ஒப்பந்தம் செய்து "அவர்கள் உறுதிமொழி வழங்கினால் அவர்களுக்கு ஆதரவான மக்களும் தமக்கு வாக்களிப்பாளர்கள்" என்று நாடாளுமன்றத் தேர்தலைப் போல் நினைப்பது முற்றிலும் தவறானது என்பதை வாக்காளர்கள் 21 ஆம் திகதி நிரூபித்துப் பாடம் புகட்டுவார்கள்.

ஏற்கனவே பல இடங்களில் 2000 ரூபாய்களும் ஏனைய செலவுகளும் கொடுத்தே கூட்டம் சேர்ந்த போதிலும் இவ்வாறாகச் சேர்ந்த கூட்டம் தேர்தல் தினத்திலும் தமக்கு வாக்களிக்கும் என்று சில வேட்பாளர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதைவிட இந்தியா இலங்கையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு முக்கியமான இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பின்னணியில் செயல்படுகிறது. மேலும் கடந்த காலத்தில் ஜனாதிபதி தேர்தலில் தமிழர் வாக்குகளை பெற்று வென்றவர்களும் "தமிழர்களுக்குச் சாதகமாகப் பெரிதாக எதுவும் செய்யவில்லை" என்ற ஏமாற்ற உணர்வுகளையும் பயன்படுத்தித் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி, வெறுப்புற்று இருக்கும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்துச் சூழ்ச்சி மூலம் தனக்குச் சார்பான வேட்பாளர்களின் வெற்றியை உறுதிப்படுத்த நினைக்கிறது.

அதாவது சஜித் அல்லது ரணில் இருவரில் யார் வெற்றி பெற்றாலும் இந்தியத் தூதுவர் "ஏற்கனவே தமிழர்களுக்காக 13 ஆம் திருத்தம் இந்தியாவினால் கொண்டுவரப்பட்டது என்றும், அதற்குமேல் ஒன்றும் தமிழருக்கு கிடைக்காது" என்று யாழ்ப்பாணம் சென்று போதிப்பார் என்பதுடன் அதற்கு தமிழ் கட்சிகளின் தலையாட்ஜடிஸடும் பிரதிநிதிகள் மௌனமாகத் தலையாட்டி விட்டு வருவார்கள்.

ஆனால் இந்திய – அமெரிக்க கூட்டணியின் கட்டுப்பாட்டில் இல்லாத தலைவர் ஒருவர் தென்பகுதியில் ஆட்சியைக் கைப்பற்றினால் இந்தக் கூட்டணி தமிழர் தரப்பை உதாசீனம் செய்யாது தமிழர் மூலமாகவும் காரியங்களை சாதிக்க முயல்வார்கள். போர்க்குற்றம் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான அனைத்து ஆதாரங்களும் இந்த மேற்குலகக் கூட்டணியின் கையில் இருந்தாலும், இலங்கையின் ஜனாதிபதி அவர்களிடம் மண்டியிட்டால் தொடர்ந்து தம்மிடம் உள்ள ஆதாரங்களை மறைத்து அந்த ஜனாதிபதி மூலம் தமக்கு சாதகமான விடயங்களை நிறைவேற்றிக் கொள்வார்கள் என்பதையும் தமிழர் தரப்பு கவனத்தில் எடுக்க வேண்டும். அதே வேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரினால் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய முக்கிய விடயங்களாகிய காணாமல் போனவர்களுக்கான நீதி மற்றும் ஈஸ்டர் குண்டுவெடிப்பில் இறந்தவர்கள் தொடர்பான உரிய விசாரணைகள் ஆகியன இடம்பெற, ஆட்சி மாற்றத்தின் பின்னர் உரிய அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும்.

மேலும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் புதிய அரசமைப்பு (யாப்பு ) ஒன்றை உருவாக்க இருப்பதாக தெரிவித்து இருப்பதன் மூலம் தமிழர்களுக்கு 13ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமத்துவமான உரிமைகளை பெறுவதற்கு ஒரு புதிய வாய்ப்பு கிடைக்கும். ஜனாதிபதி தேர்தலில் குறித்த தரப்பு வெற்றி பெற்றுவிட்டால் விரைவாக வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் சிங்களவர்களின் வாக்குகள் நான்காகப் பிரியும் நிலையில் தமிழர்களின் வாக்குகளின் பேரம் பேசும் வலு அதிகரிக்கும். இவ்வாறாக எதிர்காலத்தில் நிகழக்கூடிய அனுகூலங்களை முன்கூட்டியே ஆராய்ந்து அதற்கேற்ப ராஜதந்திர திட்டங்களை வகுத்து தமிழ் தலைமைகள் புத்திசாலித்தனமாக ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்.

அத்துடன் இலங்கையைச் சுரண்டும் இந்திய வல்லாதிக்கச் சூழ்ச்சிகளையும் நாட்டின் பொருளாதாரத்தை அழித்தவர்களையும் அம்பலப்படுத்தி நாட்டை மீட்கப் புத்திஜீவிகளும் மனித உரிமை ஆர்வலர்களும் இன மத வேறுபாடின்றி ஒன்றுபட வேண்டும்.



# முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மஹாநாம பிணையில் விடுவிப்பு

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைதுசெய்யப்பட்ட முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ மஹாநாம பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் அவர் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக்க பிரேமரத்னவின் கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள ஒத்துழைத்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த வருடம் செப்டெம்பர் 17ஆம் திகதி உத்திக்க பிரேமரத்னவின் கார் மீது அநுராதபுரத்தில் அவரது வீட்டிற்கு முன்பாகத் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# தனிநபர் வருமான வரி வீதத்தை குறைக்க அமைச்சரவை திட்டம்




அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தற்போது அறவிடப்படும் தனிநபர் வருமான வரி வீதத்தை குறைப்பதற்கு அமைச்சரவை திட்டமிட்டுள்ளது.

இதுவரை மாதாந்தம் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டும் நபர்கள் வரிக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் புதிய திருத்தத்திற்கு அமைவாக 150,000 ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டும் நபர்கள் தனிநபர் வருமான வரிக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

இதனிடையே 06 வீதம் முதல் 36 வீதம் வரை 06 பிரிவுகளின் கீழ் அறவிடப்பட்ட வரி வீதமும் குறைக்கப்படவுள்ளது.

புதிய திருத்தத்திற்கு அமைவாக 150,000 ரூபா முதல் 200,000 ரூபா வரை தனிநபர் வருமானத்தின் மீது 02 வீத வரி அறவிடப்படவுள்ளது.

200,000 ரூபாவிலிருந்து 300,000 ரூபா வரையான பிரிவுக்கான வரி வீதம் 4.2 ஆக அமைந்துள்ளது.

300,000 ரூபா முதல் 400,000 ரூபா வரை 8.8 வீதமும் 400,000 ரூபா முதல் 500,000 ரூபா வரை 13.5 வீதமும் 500,000 ரூபா 750,000 ரூபா வரை 18 வீதமும் 750,000 ரூபா முதல் 10,000,00 ரூபா வரை 24 வீதமும் 10,000,00 ரூபாவுக்கும் மேற்பட்ட வருமானத்திற்கு 27 வீதமும் தனிநபர் வரி வீதமாக நிர்ணயிக்கப்படவுள்ளது.



# வாகன இறக்குமதிக் கட்டுப்பாட்டை நீக்குவதற்கு அமைச்சரவை தீர்மானம்

அனைத்து வாகனங்களுக்கும் விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி கட்டுப்பாடுகளை 2025 பெப்ரவரி முதல் நீக்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

எக்ஸ் வலைத்தளத்தில் பதிவொன்றை வெளியிட்டு நீதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதனை தெரிவித்துள்ளார்.

ரூபாவின் பெறுமதி வலுவடைந்தமையினால் பொருளாதாரம் வழமைக்கு திரும்பியுள்ளதன் பலனை மக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகின



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள பரீட்சைத் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இதனை உறுதிப்படுத்தினார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நாளை நடைபெறவுள்ளது. இதில் இம்முறை 3,23,879 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

தமிழ் பிரிவில் 79,000 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் 2,849 பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. காலை 9 மணிக்கு முன்னர் பரீட்சை நிலையத்திற்கு சமுகமளிக்க வேண்டுமென மாணவ, மாணவிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என பரீட்சைத் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

பரீட்சை நிலையத்திற்குள் வெளியாட்கள் பிரவேசிக்க இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்கு தேவையான பேனா, பென்சில் மாத்திரமே பரீட்சார்த்திகள் எடுத்துச் செல்ல முடியும்.

இதேவேளை, கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் நொவெம்பர் 25 முதல் டிசம்பர் 20 வரை நடத்தப்படும் என பரீட்சைத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.




# தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஒன்பது நாடுகளின் கண்காணிப்பாளர்கள்

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 9 நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் அழைப்பிற்கிணங்க அவர்கள் வருகை தந்துள்ளனர் என அதன் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் அவர்கள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

சார்க் வலய நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ரஷ்ய கண்காணிப்பாளர்களும் இந்த கண்காணிப்புக் குழுக்களில் அடங்குகின்றனர்.

அவர்கள் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அறிக்கையொன்றை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கையளிக்கவுள்ளனர்.

இதனிடையே, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

# வாக்காளர் அட்டை விநியோகம் இன்றுடன் நிறைவு பெறுகின்றது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கு விநியோகிக்கும்பணி இன்றுடன்நிறைவு பெறும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை 80 வீத உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அருகாமையிலுள்ள தபால் அலுவலகங்களில் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி தமது வாக்காளர் அட்டையை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.



# நீண்ட வார இறுதி விடுமுறைக்காக விசேட போக்குவரத்துச் சேவைகள்



நீண்ட வார இறுதி விடுமுறைக்காக சொந்த இடங்களுக்கு செல்வோருக்காக நேற்று முதல் விசேட போக்குவரத்து சேவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய மேலதிகமாக சுமார் 60 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

நேர அட்டவணையின்றி மேலதிக பஸ் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கூறியுள்ளது.

இதனிடையே, நேற்று மற்றும் இன்றைய தினம் பதுளையிலிருந்து கொழும்பு வரை விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுவதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.






# அரியநேத்திரனை ஆதரித்து மன்னாரில் நேற்றுக் கூட்டம்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

ஜனாதிபதித் தேர்தலின் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் ஆதரித்து பொதுக்கூட்டம் நேற்றய் வெள்ளிக்கிழமைப்மாலை 4.30மணியளவில் மன்னார் நகர பஸ் நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மோகன்ராஜ் ஒருங்கிணைப்பில் இடம் பெற்றது.

அரியநேத்திரனுக்கு மன்னார் மக்கள் அமோக வரவேற்பு வழங்கினர்.

இந்தப் பொதுக் கூட்டத்தில் தமிழ் தேசியக் பொதுக் கட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா, முன்னாள் யாழ் மேயர் மணிவண்ணன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதன் போது சுமார் ஆயிரம் பேர் வரை குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.










# ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் வடக்கு மாகாணத்தில் 3 அமையும்

## 2 வலயங்கள் நேற்று உத்தியோகபூர்வமாக பெயரிடப்பட்டன

வடக்கு மாகாணத்தில் ஸ்தாபிக்கத் திட்டமிடப்பட்டுள்ள மூன்று ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் இரண்டு வலயங்கள் நேற்று உத்தியோகபூர்வமாக பெயரிடப்பட்டன. யாழ்ப்பாணம் காங்கேசன்துரை மற்றும் கிளிநொச்சி பரந்தன் ஆகிய ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் நேற்றுப் பெயரிடப்பட்டன . இந் நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ்/ம், முதலீட்டு ஊகுவிப்பு அமைச்சர் திலும் அமுனுகமவும், முதலீட்டு பிரதிநிதிகளும் கலந்துக் கொண்டு கொண்டனர்.

இரண்டு ஏற்றுமதி செயலாக்க வலயங்களிலும் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.













# தொடர்ந்து அதிகரிக்கும் தேர்தல் முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கடந்த 24 மணித்தியாலங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு 218 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என நேற்று மாலை அந்த ஆணைக்குழு அறிவித்தது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 62 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 152 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதன்படி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 3,828 ஆக அதிகரித்துள்ளது.

தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3,720 முறைப்பாடுகளும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 28 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் ரூ.1,350 எனக் குறிப்பிட்டு வர்த்தமானி வெளியீடு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்த பட்ச வேதனமாக 1,350 ரூபாவை அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் தொழில் அமைச்சின் செயலாளர் ஆர்.பீ.ஏ.விமலவீரவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதேநேரம், மேலதிக தேயிலை கிலோ கிராம் ஒன்றுக்கு 50 ரூபா வழங்கப்பட வேண்டும் எனவும் அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த 10 ஆம் திகதி முதல் எதிர்வரும் 3 வருடங்களுக்கு இந்த தீர்மானம் அமுலில் இருக்குமென வேதன நிர்ணய சபையில் தீர்மானிக்கப்பட்டதாக அந்த வர்த்தமானி அறிவித்தலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# சீதா அரம்பேபொல பதவிப்பிரமாணம்

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட விசேட வைத்தியர் சீதா அரம்பேபொல, நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சீதா அரம்பேபொல, சுகாதார இராஜாங்க அமைச்சராக வகிக்கும் பதவிக்கு மேலதிகமாக, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவிப் பிரமாண நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.

# உத்தியோகபூர்வ பெறுபேறுகளை மாத்திரமே நம்புமாறு ஆணைக்குழு மக்களிடம் கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்புகள் நிறைவடைந்த பின்னர் வெளியாகின்ற உத்தியோகபூர்வ பெறுபேறுகளை மாத்திரமே நம்புமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பொது மக்களைக் கோரியுள்ளது.


அத்துடன் உத்தியோகபற்றற்ற முடிவுகளை வெளியிடுவதிலிருந்து விலகி இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணும் நிலையங்களில் ஜனாதிபதி வேட்பாளர்களது பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கும்.

அவர்கள் வாக்கு எண்ணும் பணிகளை அவதானித்து, அதிகாரிகள் கூறுகின்ற எண்ணிக்கைகளை அதன் பின்னர் ஏற்படுகின்ற சீர்திருத்தங்களைக் கணக்கில் கொள்ளாமல் தெளிவற்ற விவரங்களை வெளியிடக்கூடும்.

இவ்வாறான தெளிவற்ற உத்தியோகபற்றற்ற விவரங்கள், உத்தியோகபூர்வ பெறுபேறுகளிலிருந்து வித்தியாசமாக இருக்கவும் கூடும்.

எனவே பொதுமக்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இறுதியாக உறுதி செய்யப்பட்டு வெளியிடப்படுகின்ற முடிவுகளை மாத்திரமே நம்ப வேண்டும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.






# நாணய நிதியத்தின் அடுத்த மீளாய்வு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர்தான்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே இலங்கை தொடர்பான நீடிக்கப்பட்ட நிதி வசதியின் மூன்றாவது மீளாய்வு இடம்பெறும் எனச் சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

செய்தியாளர் சந்திப்பொன்றில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, சர்வதேச நாணய நிதியத்தின் செய்தித் தொடர்பாளர் ஜுலி கோஸாக் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் அல்லது மக்களின் விருப்பத்தின் அடிப்படையில், நாங்கள் வேலைத்திட்டக் கலந்துரையாடல்களை முன்னெடுப்போம். அதற்கு தாங்கள் தயாராக இருக்கின்றோம்.

எவ்வாறாயினும், மிக மோசமான நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு வேலைத்திட்டங்களின் நோக்கங்களை அடைவது ஒரு முக்கிய படியாகும்.

இலங்கையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் நாடு இன்னும் நெருக்கடியிலிருந்து மீளவில்லை. கடினமாக வென்ற வெற்றிகளைப் பாதுகாப்பது இலங்கைக்கு முக்கியமானது."– என்றார்.

# ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் 18 ஆம் திகதி நள்ளிரவு நிறைவுபெற வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு




ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவுபெற வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பு எதிர்வரும் 21ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அந்த தினத்தில் மாலை 4 மணிவரை வாக்களிக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்காக நாடளாவிய ரீதியில் 13,417 வாக்களிப்பு நிலையங்களை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -14.09.2024




உங்களின் தேவைக்கு பயன்படும் சரியான முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும். இன்று துடிப்பான நாளாக இருக்கும். கவனமுடன் செயல்பட்டால் நன்மை விளையும்.

உங்கள் பணிகளை உறுதியுடனும் எளிதாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். மியூச்சுவல் பண்டில் நீங்கள் பணம் முதலீடு செய்யலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். .




இன்றைய நாள் சிறப்பாக இருக்க உற்சாகமாக இருங்கள். தேவையற்ற எண்ணங்களை தவிர்த்திடுங்கள்.

நீங்கள் கவனமுடனும் விழிப்புடனும் பணியாற்ற வேண்டும். உற்சாகமின்மை மற்றும் சோம்பல் காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக பண இழப்பு ஏற்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.இந்தச் சூழ்நிலையை நீங்கள் கையாள வேண்டும்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். அதன் மூலம் பதட்டத்திலிருந்து விடுபட்டு ஆறுதல் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் இருக்கும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் காணப்படும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.




உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நேர்மறை எண்ணத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பது சிறந்தது.

கூடுதல் பணிகள் காணப்பட்டாலும் பணியில் வளர்ச்சி காணப்படும். கவனமுடன் பணியாற்றுங்கள்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சியடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் சிறந்த பலன்கள் காண்பீர்கள். வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களுக்கு வரவேண்டிய நீண்ட கால நிலுவைத் தொகை வந்து சேரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. நீங்கள் விரும்பியதை அடியஅடைய கடினமாக உழைக்க வேண்டும்.

சக பணியாளர்களுடன் மோதல் காணப்படும். பணிகளைக் கையாளும்போது பொறுமை அவசியம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வீட்டில் பெரியவர்களின் உடல் நலத்திற்கு பணம் செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுங்கள். இதனால் உங்கள் உற்சாகம் அதிகமாகும்.

பணிகள் சுமூகமாக நடக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று போதிய பணம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று தொழில் சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறை உங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டும். உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்ற அமைதியான அணுகுமுறை தேவை.

இன்று ஓய்வெடுக்க முடியாதபடி பணிகள் அதிகமாக இருக்கும். பணியில் ஏற்படும் மாறுபாடுகளுடன் ஒத்துப் போக உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை இருக்காது. வரவும் செலவும் சமமாக இருக்கும். இன்று எந்த முக்கிய முடிவும் எடுக்க வேண்டாம்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் -14.09.2024




உங்களின் தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் காணலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பணவரவு காணப்படும்.ஆன்மீக விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களை சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் செய்வீர்கள். முக்கிய நடவடிக்கைகள் இன்று நற்பலங்களைத் தரும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை அனுசரணையோடு செய்வீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். அதிகமாக சேமிக்கும் நிலை இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று வெற்றி கிடைக்கும் நாள். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும் நாள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும் , உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று செழிப்பாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்கள் உங்களுக்கு கவலையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணியில் தவறுகள் நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணையுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. சில சூழ்நிலைகளில் நீங்கள் பணத்தை சரியாக கையாள இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரலாம்.





